நாள்- 13.04.2023

Case No.OS.88/2015

PW.1 - லட்சுமி லதா – 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் ராணிபேட்டையில் உள்ள அறிஞர் அண்ணா சாலை, பாரதி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் எவ்வளவு ஆண்டுகளாக அந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் 12 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். என் கணவர் பெயர் என்ன என்றால் கருணாநிதி ஆகும். இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது அந்த முகவரியில் தான் இருந்தேனா என்றால் இல்லை, ஆஞ்சிநேயர் கோயில் எதிர்புறம் விளம்சி ரோட்டு தெருவில் வசித்து வந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது குடும்ப அட்டையின் நகல் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். அதில் பாரதிநகர் முகவரிதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முகவரியில்தான் 2007 லிருந்து இருந்து வருகிறேனா என்றால் இல்லை விலாசம் மட்டும் மாற்றியுள்ளோம், அந்த வீட்டை வாடகைக்கு விட்டுள்ளோம். நான் எந்தெந்த சொத்துக்கள் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆஞ்சிநேயர் தெருவில் உள்ள வீடு , எம்.எப் ரோட்டில் உள்ள கடை ஆகிய சொத்துக்களை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எம்.எப். ரோட்டில் உள்ள கடையின் எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் காட்டியுள்ள சொத்து விவரத்தில் ஆர்.ஆர் ரோடு பழைய கதவு எண்.9, புதிய எண்.47 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்து விவரத்தில் காட்டியுள்ள 1 மற்றும் 2 அயிட்டத்தில் உள்ள சொத்து ஒரே சொத்தா என்றால் ஒரே சொத்துதான் , அதில் இரண்டு வீடுகள் உள்ளது. 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களுக்கு ஒரே செக்குபந்தியா என்றால் ஒரே செக்குபந்திதான். 1 , 2 அயிட்டங்களுக்கும் ஒரே அளவுதான் என்றால் சரிதான். 1 வது அயிட்டத்தில் 36, 36A, 36B என்று சொல்லியுள்ளேன். 2 வது அயிட்டத்திற்கு 36,36A,36 என்று காட்டப்பட்டுள்ளது. மேற்படி 36, 36A, 36B க்கு தனித்தனியாக செக்குபந்தி காட்டவில்லை என்றால் சரிதான். 1 வது அயிட்டத்திற்கு சொத்து மதிப்பு ரூ.92,500/– மற்றும் 2 வது அயிட்ட சொத்து மதிப்பும் ரூ.92,500/– என்று சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 வது அயிட்ட சொத்தும், 4 வது அயிட்ட சொத்தும் ஒரே சொத்தா என்றால் இல்லை, வேறுவேறு சொத்தாகும். 3 வது அயிட்ட சொத்திக்கு கதவு எண்.9, 10 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், 4 வது அயிட்ட சொத்திற்கு பழைய கதவு எண்.9, புதிய எண்.47 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 3 வது அயிட்ட சொத்துக்கும், 4 வது அயிட்ட சொத்துக்கும் கதவு எண்.9 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 2 அயிட்டமும் ஒரே சொத்துதான் என்றால் சரிதான்.

(1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கா வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது)